31st August 1961]

SRI M. KALYANASUNDARAM: திருச்சி ஜில்லாவில் காவேரிக் கரையில் இருக்கும் கல்லணையும் அப்பர் அணைக்கட்டும் பிரயாணிகள் தங்குவதற்கு சிறந்த இடமாயிருக்கின்ற காரணத்தினால், இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்காவிட்டாலும் ராஜ்ய சர்க்காராகிலும் இதற்கு நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த இடத்தில் எல்லாவித முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்ந்து நடைபெறும். "லோ இன்கம் குரூப் ரெஸ்ட் ஹவுசஸ்" கட்டப்படவில்லை, மற்ற எல்லா முன்னேற்ற விஷயங்கள் கவனிக்கப்படும்.

SRI A. A. RASHEED: May I know whether any steps have been taken to provide catering at these Rest Houses?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, wherever it is necessary catering facilities have been made.

Drinking Water-supply Schemes

DEPUTY SPEAKER: As the hon. Member, who gave notice of Question No. 1536 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*1536 *Q.*—SRI A. R. MARIMUTHU: கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் குடி தண்ணீர் திட்டங்களுக்கு பொதுமக்கள் 15 சத வீதம் கட்டவேண்டும் என்று சர்க்கார் உத்திரவிட்டுள்ளதா?

(இ) பஞ்சாயத்துக்களின் நிதிநிலையை உத்தேசித்து இதைத் தளர்த்த அரசாங்கம் உத்திரவிடுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes Sir.

(இ) The matter is under consideration in the context of the entrustment of Community Development and Local Development Works Programmes to the Panchayat Union Councils, under section 66 of the Madras Panchayats Act, 1958.

Drinking Water-Supply (Coimbatore Town)

* 1537 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any decision has been taken recently to augment drinking water-supply in Coimbatore town; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI: கேரள சர்க்கார் கோயம்புத்தூருக்கு போதுமான அளவிற்கு குடித் தண்ணீர் கொடுப்பதாகச் சொன்னார்களா? அப்படியானால் சிறுவாணித் திட்டத்தை எடுத்துக் கொள்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: கேரள அரசாங்கத்துடன் பேசி முடிவிற்கு வரவேண்டியதாக இருப்பதால், இரு ராஜ்ய முதல் மந்திரிகளும் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.